வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P.1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 31.05.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 152 பக்கங்கள் : 12

# இலங்கை இன்னமும் தமிழரை ஒடுக்குகிறது

## பிரிட்டனின் லிபரல் டெமோகிறட்ஸ் கட்சி கண்டனம்



லண்டன், மே 31

**இலங்கையில் தமிழ் மக்கள் இன்னமும் ஒடுக்கப்படுகின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சரியானவற்றை செய்வதற்கு தவறிவிட்டார். இன்று இலங்கை அரசாங்கம் எப்போதும் இல்லாதளவு மோசமாக உள்ளது என்று பிரிட்டனின் லிபரல் டெமோகிறட்ஸ் (Liberal Democrats) கட்சி தெரிவித்துள்ளது.**

பிரிட்டனின் மூன்றாவது பெரிய கட்சியான லிபரல் டெமோகிறட்ஸ், "இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ. சி. சி) பரிந்துரைக்கப்பட வேண்டும் இதற்கு எமது கட்சி ஆதரவை அளிக்கும்", என்று கூறியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப் படுகொலை 15ஆண்டு நினைவை முன்னிட்டு அந்தக் கட்சியின் தலைவர் எட் டேவி நேற்று முன்தினம் வெளியிட்ட விசேட காணொலியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தமிழர்களுடன்

11

## விபத்தில் பெண் பலி!

யாழ்ப்பாணம், மே 31

சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சைக்கிளில் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த தம்பதியரை பின்னால் வந்த கார் மோதியதில் மனைவி உயிரிழந்தார்.

பண்டத்தரிப்பில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த அல்பேர்ட் வில்லியம் சரோஜினி தேவி (வயது 61) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த பெண் கடந்த சில நாட்களாக சுகவீனமடைந்திருந்தார்.

11



## வவுனியா சிங்கள குடியேற்றம்; திலீபன் எம். பி. நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, மே 31

வவுனியாவில் சிங்கள குடியேற்ற கிராமங்கள் மற்றும் விகாரை நிர்மாணத்துக்காக 29 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார் ஈ. பி. டி. பி. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன்.

நந்திமித்திரகம என்ற சிங்கள குடியேற்ற கிராமத்தில் விகாரை ஒன்றின் நிர்மாண பணிக்காக 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கியுள்ளார்.

11

## 13-15 வயது சிறார்கள் புகைத்தலுக்கு அடிமை

கொழும்பு, மே 31

நாட்டில் பெரும்பாலான சிறுவர்கள் இ - சிகரெட் பாவனைக்கு பின்னரே புகைத்தலுக்கு அடிமையாகியுள்ளனர். 13 முதல் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களே இவ்வாறு புகைத்தல் பாவனைக்கு அடிமையாகியுள்ளனரென சிறுவர் நோய் தொடர்பான மருத்துவ நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்தார்.

பாடசாலைகளில் 9 ,10, 11 ஆம் தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களில் 3. 7 சதவீதமானோர் புகைத்தல் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இ - சிகரெட் பயன்பாட்டுக்குப் பின்னரே புகைத்தலுக்கு அடிமையாகியுள்ளனர்.

11

## சுமந்திரன் எம். பி. ரணிலின் முகவர்

### கஜேந்திரன் எம். பி. சாடல்

யாழ்ப்பாணம், மே 31

பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தமிழ்த் தேசியத்தின் தேசவிரோதி. விடுதலைப் புலிகளை அடியோடு அழிக்க முயன்ற ரணிலின் முகவர். - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் மேலும் கருத்துரைத்த அவர், "சுமந்திரன் அரசாங்கத்தை பாதுகாத்துச்

11



## சர்வதேச விசாரணையே எங்களுக்கு வேண்டும்!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்!

மன்னார், மே 31

போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்து விட்டன. தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை சிங்கள அரசு தருவார்கள் என்பதில் நம்பிக்கை இல்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எமக்கு சர்வதேச விசாரணையே தேவை - இவ்வாறு மன்னார் மாவட் டத்தில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

11

## ஜனாதிபதித் தேர்தல் அறிவித்தபடி நடக்கும்

கொழும்பு, மே 31

ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தபடி அரசமைப்பு விதிகளுக்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நடத்தப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்ததையும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பு தேசிய நூலக சபையில் மார்ட்டின்

11



## இராணுவ தேவைக்கு காணிகள் அளவீடு செய்வது நிறுத்தப்படும்

### யாழ். ஒருங்கிணைப்பு குழுவில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் தேவைக்கு பொது மக்களின் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் காணிகளை அளவீடு செய்வதை நில அளவைத் திணைக்களம் நிறுத்த வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப் பது என்றும்

11

## நீதியையும் பொறுப்புக்கூறலையும் இலங்கை நிலைநாட்ட வேண்டும்!

### கெலும் மக்ரே வலியுறுத்து

கொழும்பு, மே 31

இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மிகமோசமான வன்முறைகள் - மீறல்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்த உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுவதும் - பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்படுவதும் இன்றியமையாததாகும்.

- இவ்வாறு "நோ பயர் ஸோன்" ஆவணப் படத்தின் கெலும் மக்ரே தெரிவித்துள்ளார்.

இலங்கையில்

11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஒருவரிடம் போய் அரசியலமைப்பு சட்டத்தில் இருக்கும் பதின்மூன்றாவது திருத்தத்தை கைவிட்டுவிடுவோமா என்று கேட்டால், "அதற்கு என்ன? அதனால் நமக்கு என்ன?" என்றுதான் பதில் அளிப்பார்கள்.

மொத்தத்தில் இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்தையே எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொண்டவர்களல்ல தமிழர்கள். அதனால், அதில் இருக்கும் எதைப் பற்றியும் அவர்கள் கவலை கொள்ளப்போவதில்லைத் தான்.

கடந்த வருடம் இந்தப் பதின்மூன்றுக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி வவுனியா வரை பெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தியது. பெரும் செலவில் நடத்தப்பட்ட அந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கெல்லாம் போகும் வழிகளில் எல்லாம் உணவு பரிமாறப்பட்டது. தெற்கில் அரசியல் கட்சிகள் ஊர்வலம், கூட்டங்கள் நடத்துவதுபோல.

அந்தப் பேரணியில் கலந்துகொண்ட ஒருவரிடம் பின்னர் சந்தித்தபோது கேட்டேன், "பதின்மூன்றுக்கு எதிராக நடந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டீர்களே, அப்போ, இந்த விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர சொல்வதுபோல மாகாண சபைகளை கலைத்துவிடச் சொல்கிறீர்களா?" என்று.

பட்டென்று பதில் சொன்னார், "அதையும் இல்லாமல் செய்துவிட்டால், நமக்கு இத்தனை காலம் போராடியதற்கு மிஞ்சப்போவது என்ன?" என்று.

பதின்மூன்றைப் பற்றி இங்கே நான் எழுதித் தொடங்கியதும் சிலர், பார்த்தீர்களா இவர் சுற்றி வளைத்து அதில்தான் நிற்கிறார் என்று முணுமுணுக்கப் போகிறார்கள்.

அதுவல்ல நான் சொல்ல வருவது,

அதாவது, பதின்மூன்று பற்றி பேசுவதற்கும் மாகாண சபைகளை பற்றி பேசுவதற்கும் இடையில் இருக்கும் "மக்களின் புரிந்துகொள்ளும் வேறுபாட்டை" சுட்டிக்காட்டவே இதனைச் சொன்னேன். இத்தகைய புரிந்துகொள்ளும் வேறுபாடு நமது தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல, சிங்கள மக்களுக்கும்தான் உண்டு.

அவர்களை பொறுத்தவரை, பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தப்போவதாக யார் சொன்னாலும் அதனை அவர்கள் சீரியஸாக எடுத்துக்கொள்வதில்லை. முழுமையாக என்பதன் அர்த்தம் பல. பதின்மூன்றை இன்று முழுமையாக அமுல்படுத்துவது என்றால், பின்னர் பதினான்காவது திருத்தத்தின் மூலம் பதின்மூன்றில் இருந்து எடுக்கப்பட்டதையும் சேர்த்தா என்பது பற்றி யாரும் விளக்குவது இல்லை.

பதின்மூன்று முழுமையாக என்றால், அதிலிருந்து பின்னர் ஒவ்வொரு திருத்தங்களின் போதும் "பிடுங்கி" எடுக்கப்பட்ட அதிகாரங்களையும் சேர்த்தால்தான் அது முழுமையானது என்று அர்த்தம் கொள்ளும்.

ஆனால், பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவது என்பது, அதிலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட அதிகாரங்களை விட்டுவிட்டுத்தான் என்றும் சிலர் வியாக்கியானம் சொல்வார்கள்.

ஆனால் அதைவிட, முழுமையான அதிகாரம் என்பதை பொலிஸ், காணி அதிகாரங்களையும் சேர்த்துத்தான் என்று சிங்கள மக்கள் இலகுவில் புரிந்துகொள்வதில்லை.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நமது எம். பி. சி. வி. விக்னேஸ்வரனை அவரின் இல்லத்தில் சந்தித்தபோது, தான் பொலிஸ் அதிகாரம் இல்லாமல் மற்றைய அனைத்து அதிகாரங்களையும் அமுல்படுத்துவதாக சொன்னபோது, விக்னேஸ்வரன், சஜித் பிரேமதாஸ முழுமையாக அமுல்படுத்துவதாக அறிவித்திருக்கிறாரே என்று சொல்லியிருக்கிறார்.

அதற்கு ரணில், "இப்போது அவரிடம் பொலிஸ் அதிகாரங்களையும் சேர்த்து தருவீர்களா என்று கேட்டுப் பாருங்கள் என்றிருக்கிறார். அவர் அப்படி எதற்காக சொன்னார் என்பது ரணிலை தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று சொல்வதற்கும் பொலிஸ் அதிகாரங்களை கொடுப்பேன் என்று சொல்வதற்கும் இடையே உள்ள வித்தியாசம் ரணிலுக்கு தெரியாததல்ல. சஜித்தின் வாயால் பொலிஸ் அதிகாரத்தை கொடுப்பேன் என்று சொல்ல வைத்து, அதனையே தெற்கில் சஜித்துக்கு எதிரான ஆயுதமாக பயன்படுத்தவே அவர் அப்படி கேட்கச் சொன்னார் என்பது நாம் புரிந்துகொள்ளக்கூடியதுதான்.

அதனால்தானோ என்னவோ, ரணில் அவ்வாறு விக்னேஸ்வரனிடம் கேட்ட மறுதினமே, நமது சுமந்திரன் எம்.பி., சஜித், காணி-பொலிஸ் அதிகாரங்களை தருவதாக தன்னிடம் சொன்னார் என்று கூறியிருந்தார்.

இந்த சர்ச்சைக்குரிய விவாதம் குறித்து சஜித்தின் கவனத்துக்கு அவரது பங்காளிக்கட்சியான தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எடுத்துச் சென்றாரெனவும் அப்போது அவர், தான் சொன்னது சொன்னதுதான் முழுமையாக என்பது காணி, பொலிஸ் அதிகாரங்களையும் சேர்த்துத்தான் என்று கூறியிருக்கிறாராம்.

இந்தத் தகவலை ஊர்க்குருவியிடம் பகிர்ந்துகொண்ட மனோ கணேசன், அது மாத்திரமன்றி, ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்துகின்றபோது, அதனுடன் சேர்த்து மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடத்துவது பற்றியும் யோசிப்பதாகக் கூறியிருக்கிறாராம்.

**ஊர்க்குருவி.**

# பொது வேட்பாளருக்கான தெரிவை கிழக்கிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்

## அவரை தமிழ் மக்களின் குறியீடாக நிறுத்தவேண்டும்
## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

*யாழ்ப்பாணம், மே. 31*

பொதுவேட்பாளர் குறிப்பிட்ட சில தரப்பினரின் அரசியல் நலன்களை பிரதிபலிப்பவராக விளங்கக்கூடாது- அவர் தமிழ் மக்களின் குறியீடாக நிறுத்தப்படவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையின் அரச தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் தொடர்பான பேச்சுகள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில், கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் பொறிமுறைகளிற்குள் சிக்குண்டு இனவிடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் விடுதலைப்பயணத்தில் இத்தேர்தல் களத்தினை தங்கள் நலன்சார்ந்து எவ்வாறானதாகக் கையாள வேண்டும் என்பதில் கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து இனியாவது சுதாகரித்து முன்நகர வேண்டிய அவசியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

2009 இற்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் சாணக்கியம், ராஜதந்திரம் என்னும் பெயரில் வெற்று வாக்குறுதிகளை மாத்திரமே நம்பி தமிழ்த் தரப்புக்களால் முன்னெடுக்கப்படும் பேரம் பேசும் இணக்க அரசியலினால் தமிழினவழிப்பிலிருந்து தாயகத்தின் ஒரு அங்குல நிலத்தையேனும் காப்பாற்ற முடியவில்லை என்பதோடு, தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளும் உதிரிகளாக்கப்பட்டுள்ளமையும் அது உளவியல் ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மனநிலையினை மக்களிடையே விதைப்பதிலுமே வெற்றியடைந்துள்ளது.

1. ஈழத்தமிழ் மக்களை அரசியற்படுத்தி அணிதிரட்டுதல்.
2. போரிற்குப் பின் மக்களிடையே உள்ள தோல்வி மனோநிலையினை அகற்றுதல்.
3. வடக்கு - கிழக்குக்கான பொருளாதார கட்டமைப்பை நிறுவுதல்.
4. அரசற்ற தரப்பாக பன்னாடுகளைக் கையாள்வதற்கான வெளிவிவகாரக் கொள்கை மற்றும் கட்டமைப்பை உருவாக்குதல்.
5. பன்னாட்டுச் சமூகத்தில் கூட்டாகத் தமிழரின் குரலை முன்வைத்தல்.
6. வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பினை தடுத்துநிறுத்துதல்.
7. அதிகாரப்பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் தமிழ் அரசியலை நகர்த்துதல்.

ஓர் அரசற்ற தரப்பாக எமது தமிழ்ச் சமூகத்தினால் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட விடயங்களெதனையும் சாதித்திராத தமிழ் அரசியற் தரப்புக்கள் தொடர்ந்தும் பேரம் பேசும் அரசியலால் இனியும் எதையாவது சாதிக்கும் என்பதில் நம்பிக்கையில்லை. தமிழ் அரசியற் கட்சிகளும், குடிமக்கள் சமூகத்தினரும் தமிழ் மக்களின் பின்நோக்கிய இந்நிலையிலாவது தம்மைச் சுதாகரித்துக் கொண்டு தமிழ் அரசியலின் பாதையினை மீளச் சரிவர தகவமைத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த 2010, 2015, 2019 ஆண்டுகளில் நடைபெற்ற சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல்களில் இனப்படுகொலைப் பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் குற்றத்தைப் புரிந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவினைப் பெற்ற நபர்களுக்கே வாக்களிப்பதற்குப் பரிகார நீதி கோரக்கூடிய தமிழ் மக்கள் தவறாக வழிநடாத்தப்பட்டோம்.

இனியாவது ஏமாற்று கபட அரசியலிற்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித்தரப்புக்களுக்கோ சென்றுசேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களை தமிழ் அரசியற் தரப்புக்கள் மேற்கொள்ளத் தவறுமேயானால் நாம் அரசியல் பிழைத்த மக்களாக்கப்படுவோம்.

சமகால அரசியற் களச்சூழலில் தமிழ் மக்களின் முன்னால் உள்ள தெரிவுகள்,

1. சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல்.
2. சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் தற்போது எதிர்பார்க்கப்படும் தேர்தலை நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான அறைகூவல் விடுக்கும் பொதுவாக்கெடுப்பாகக் கைளாளும் வகையில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துதல்.

சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல் இரண்டும் ஒரே கருத்தியலின் இருவேறுபட்ட பிரயோக வடிவங்களே! தமிழர்களால் அளிக்கப்படாத வாக்குகள் மற்றும் பொதுவேட்பாளருக்கு வழங்கப்படும் வாக்குகள் என இரண்டுமே சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதத்தின் முகவர்களை நிராகரிக்கும் வாக்குகளேயாகும்.

பொதுவேட்பாளர் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த தமிழ் மக்கள் உள்ளிட்ட தொடர்புபட்ட தரப்புக்கள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம்.

1. சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணிப்பதனாலோ, தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதனாலோ சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர் எவர் வென்றுவிடக் கூடும் எனும் கேள்வி பொதுவில் அனைவரிடமும் எழக்கூடிய தொன்று. ஆனால், அரசியல் விடுதலை வேண்டும் சமூகமாக எமக்கு எது தேவை? எமது நிலைப்பாடு என்ன? என்பதுவே நாம் அக்கறை கொள்ளவேண்டியது. அதன் பக்க விளைவுகளைப் பற்றியல்ல.

2. பொதுவேட்பாளரை நிறுத்துதல் என்பது எதிர்வரும் சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைத் தமிழ் மக்களின் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தேர்தல் ஒன்றாக மாற்றுவதேயாகும். ஆகவே, பொதுவேட்பாளர் எனும் எண்ணக்கரு நடைமுறையில் வெற்றி - தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.

3. பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் இதுவரைகால வேணவாக்களை பிரதிபலிக்க வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட சில தரப்புக்களின் அரசியல் நலன்களையல்ல.

4. பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் குறியீடாக நிறுத்தப்பட வேண்டும். முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை அடையாளப்படுத்தும் வகையில் கிழக்கிலிருந்து வேட்பாளர் தேர்வு நடைபெற வேண்டும். அவ்வேட்பாளர் பெண்ணொருவாராக இருப்பின் உத்தமம்.

5. தமிழ்மக்களின் வாக்குகள் என்பது அவர்தம் வேணவாக்களைச் உறுதிபடச் சொல்வதற்கேயன்றி பேரங்கள் பேசுவதற்கல்ல. ஆகவே இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் என்ற பேச்சுக்களுக்கே இடமளித்தல் கூடாது.

6. பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் நபர் அரசியல்வாதியல்லாதவராக இருப்பதோடு, தேர்தலின் பின்னர் அந்நபர் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படுவதோ, தேர்தல் அரசியலில் ஈடுபடுவதோ தவிர்க்கப்பட வேண்டும் என்பது முன்நிபந்தனையாக்கப்பட வேண்டும்.

மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மக்களின் வாக்குகள் இத்தேர்தலிலாவது அவர்களின் உரிமைக்குரலாகப் பிரயோகிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுடனான பேரம் பேசலுக்காகப் பலியாக்கப்படாது. தமிழ்மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, தமிழ் அரசியற்கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் ஒன்றுபட்டுத் தீர்க்கமான முடிவொன்றினைத் திடசித்தத்துடன் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்தி நிற்கின்றோம் - என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
31.05.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 18

**"அஞ்சுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஒன்றை இன்னொருவர் பயன்படுத்துவது பற்றி

ஜனாதிபதித் தேர்தலில் ஈழத் தமிழ் வாக்குகளுக்கு ஒரு பிரதான பங்குண்டு. எவ்வாறு 2005இல் பகிஷ்கரிப்பின் மூலம் அந்தப் பங்கு நிரூபிக்கப்பட்டதோ அவ்வாறானதொரு சூழல் மீண்டும் ஏற்பட்டிருக்கின்றது. இவ்வாறு கூறும்போது, பகிஷ்கரிப்பு ஒரு சிறந்த எதிர்ப்பு வடிவம் என்று எவரும் கருதிவிடக்கூடாது. விடுதலைப் புலிகள் அவ்வாறானதொரு தீர்மானத்துக்கு வந்தது ஏன் என்னும் கேள்விக்கான பதிலை 'ஈழநாடு' வின் முன்னைய தலையங்கங்களிலும் குறிப்பிட்டிருக்கின்றோம்.

அது வேறு அரசியல் சூழல் - அதன் இலக்கு மிகவும் தெளிவானது. அதாவது, அடிப்படையில் அது மேற்குலகின் பேச்சிலிருந்து வெளியேறும் ஒரேயோர் இலக்குக்காக மேற்கொள்ளப்பட்ட விடயமாகும். அவ்வாறானதொரு தேர்தல் பகிஷ்கரிப்புக்கான கடைசியும் முதலுமான அரசியல் சூழல் அது மட்டும்தான். மேலும், அவ்வாறானதொரு பகிஷ்கரிப்பை விடுதலை புலிகள் போன்றதோர் அமைப்பால் மட்டுமே மேற்கொள்ள முடியும்.

கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) பகிஷ்கரிப்பு சுலோகத்தையே உயர்த்திப்பிடித்தது. ஆனால், தமிழ் மக்கள் அதனை ஒரு விடயமாகவே கண்டு கொள்ளவில்லை. பொதுவாக ஒரு குறிப்பிட்டளவான மக்கள் வாக்களிப்பில் பங்குபற்றுவதில்லை. அதற்கு பல காரணங்கள் உண்டு. அரசியல்வாதிகள்மீதான வெறுப்பு, சோம்பேறித்தனம், உடல் உபாதைகள் இப்படி பல காரணங்களால் மக்கள் வாக்களிப்பில் பங்கு கொள்ளமாட்டார்கள். அவ்வாறானவர்கள் எல்லாம், தங்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே பகிஷ்கரித்ததாகக் காண்பிக்கலாம் என்பதுதான் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் நம்பிக்கை - இது அடிப்படையில் ஓர் அரசியல் இயலாமையாகும்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடுதான் மிகவும் சரியானதோர் அணுகுமுறையாகும். ஏனெனில், மக்கள் வாக்களிப்பில் பங்குகொள்ளவும் வேண்டும். இதேவேளை, தங்களின் அரசியல் அபிலாசைகளை சொல்லவும் வேண்டும். ஜனநாயக முறைமைக்குள் ஆடவும் வேண்டும். ஆனால், தனித்துவமாகவும் ஆட வேண்டும். இந்த அடிப்படையில்தான் பலரும் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் உரையாடி வருகின்றனர்.

இவ்வாறான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்போது பொதுவாக ஒரு கேள்வி எட்டிப்பார்ப்பதுண்டு. அதாவது, இதற்கு பின்னால் யாரோ இருக்கின்றனர்? இது யாரோவொரு தென்னிலங்கை வேட்பாளருக்கு மறைமுகமாக உதவும் நோக்கம் கொண்டது. அரசியலில் ஒரு விடயத்தை மேற்கொள்ளும்போது, அது குறித்த விடயத்தை மேற்கொள்பவர்களுக்கு மட்டும் நன்மையை கொண்டுவருவதில்லை. மாறாக, ஏனைய சிலருக்கும் நன்மையை ஏற்படுத்தலாம். ஏனெனில், அவ்வாறு நடப்பதை நம்மால் தடுக்க முடியாது.

அது குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், அது எங்களுடைய வியாபாரம் அல்ல. எங்களுடைய நலன்கள் வெற்றி கொள்ளப்படுகின்றனவா அல்லது இல்லையா என்பதை பற்றி மட்டுமே நாம் சிந்திக்க வேண்டும். எப்போதுமே, ஒரு விடயத்தின் அரசியல் தாக்கத்தை அளவிடும்போது - ஒப்பீட்டடிப்படையில் அது 60 விகிதம் நன்மையாகவும் 40 விகிதம் தீமையாகவும் இருக்குமானால் - குறித்த நிலைப்பாடு நன்மையானது என்பதுதான் பொருள். இந்த அடிப்படையில்தான் நாம் ஒவ்வோர் அரசியல் தீர்மானங்களையும் நோக்க வேண்டும். ஏனெனில், நூறு விகித நன்மை என்று ஒன்றில்லை - அப்படியிருக்கவும் முடியாது.

எனவே, தமிழ் பொது வேட்பாளர் முதலில் தமிழ் மக்களுக்கு நன்மை செய்விட்டு வேறு எவருக்கும் நன்மை செய்யுமாயின், அது தமிழ் மக்களின் பிரச்னையில்லை. அடுத்தவர்கள் நமது தீர்மானங்களை பயன்படுத்திவிடுவார்களா என்று அச்சம் கொண்டால், அரசியலில் எந்தவொரு விடயத்தையும் நாம் முன்னெடுக்க முடியாது.

### சுழிபுரத்தில் கடற்படைக்கு காணி:
# பொது மக்களின் எதிர்ப்பால் அளவீட்டு முயற்சி நிறுத்தம்



யாழ்ப்பாணம், மே 31

சுழிபுரம் காட்டுப்புலத்தில் கடற்படை முகாமுக்கு 4 பரப்பு காணியை சுவீகரிக்க முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது.

காணி உரிமையாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், பொது மக்கள் இணைந்து நேற்று முன்னெடுத்த போராட்டத்தையடுத்து காணி அளவீடு நிறுத்தப்பட்டது.

காணியை அளவீடு செய்வதற்காக நேற்றைய தினம் நில அளவைத் திணைக்களத்தினர் அங்கு வந்தனர். மக்களின் எதிர்ப்பு காரணமாக அவர்கள் அளவீட்டை கைவிட்டு சென்றனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க. சுகாஷ் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

# இரண்டாம் சங்கிலியனின் 405ஆவது நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன் 2ஆம் சங்கிலியனின் 405ஆவது நினைவுதினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் சிலை அருகே நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து யமுனா ஏரியில் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மூதறிஞர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தலைமையில் யாழ். நாக விகாரை விகாரதிபதி மீகஹஜந்துக சிறீவிமல தேரர், சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், இலங்கை சைவ திருச்சபை அடிகளார் விபுலானந்தர், இந்து சமய பேரவை தலைவர் சக்திகிரீவன் ஆகியோர் முன்னிலையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, இந்தியாவின் சத்திய சனாதன சேவாவை சேர்ந்த வரும் ஊடகவியலாளருமான ஏ. சிறீநிவாசராமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, மதியம் ஒரு மணிக்கு கீரிமலையில் சிரார்த்தக் கிரியைகள் நடைபெற்று சிவபூமி மடத்தில் அன்னதானம் நடைபெறும். (ஐ)

# கசிப்புடன் இளைஞர் அச்சுவேலியில் கைது

யாழ்ப்பாணம், மே 31

அச்சுவேலி பொலிஸார் 250 லீற்றர் கோடா மற்றும் 15 லீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

நேற்று மாலை அச்சுவேலி - வாகையடியில் வீடு ஒன்றில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் அந்தப் பகுதியை சுற்றி வளைத்தனர்.

இதன்போது கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் அடுப்பு, எரிவாயு சிலிண்டர், கொள்கலன்கள் உள்ளிட்ட பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் அச்சுவேலி உதவி பொலிஸ் பொறுப்பதிகாரி பாலசூரிய தலைமையில் பொலிஸ் கொஸ் தாபிள்களான ஆனந்தராஜ், இந்திக்க, விதுஷன், சமக்தா ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

# வடக்கு மாகாண குத்துச்சண்டை: தங்கம் வென்றது முல்லைத்தீவு!


முல்லைத்தீவு, மே 31

வடக்கு மாகாண குத்துச்சண்டை போட்டியில் முல்லைத் தீவு மாவட்டம் 5 தங்கப் பதக்கங்களை கைப்பற்றியது.

முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரி உள்ளரங்கில் கடந்த 25, 26ஆம் திகதிகளில் நடந்த இந்தப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டம் 5 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலப்பதக் கங்களை வென்று முதலிடத்தைப் பெற்றது.

வவுனியா மாவட்டம் 3 வெள்ளி, 2 வெண்கல பதக்கங்களையும் கிளிநொச்சி மாவட்டம் ஒரு வெண்கல பதக்கத்தையும் வென்றன.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 31 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 18
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார். புகழ், கௌரவம் கூடும் நாள்.

**இடபம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சகஊழியர்கள் உதவுவார்கள்.

**கடகம்**
சந்திராஷ்டமம்இருப்பதால்உணர்ச்சிவசப்படமால் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள். வேலையாட்களால் விரயம் வரும். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கப் பாருங்கள்.

**சிம்மம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. புதியவர்கள் நண்பர்களாவார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களால் ஆதாயம் அடைவீர்கள். உயரதிகாரி சிலசூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
உங்கள் பேச்சில் அனுபவஅறிவு வெளிப்படும். வாகனத்தை வாங்குவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மகரம்**
குடும்பத்திலிருந்து வந்த கூச்சல், குழப்பங்கள் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். மனசாட்சி படி செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களை குறைகூறிக் கொண்டிருக்க வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம். போராடி வெல்லும் நாள்.

# இலங்கை தமிழ் மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டுதல் பயிற்சி!

சென்னை, மே 31

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையகம் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கான "கலங்கரை" தொழில் வழிகாட்டுதல் பயிற்சியை நடத்தியது.

இதுதொடர்பாக தமிழக அரசு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,


"தமிழ்நாடு முழுவதும் 29 மாவட்டங்களில் உள்ள 103 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் சுமார் 57 ஆயிரத்து 772 இலங்கைத் தமிழர்கள் வசிக்கின்றனர். அவர்களில் 2023-24ஆம் கல்வியாண்டில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்த 2 ஆயிரத்து 256 மாணவ, மாணவியர்களுக்கு தொழில் வழிகாட்டுதல் பயிற்சி 29 மாவட்டங்களில் உள்ள அரசு மாதிரி பாடசாலைகளில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தத் திட்டத்தை அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை மற்றும் தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் துறையும் ஒருங்கிணைந்து நடத்தின. இதில் கருத்துரைத்த அயலகத்தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பா. கிருஷ்ண மூர்த்தி இலங்கைத் தமிழர்களுக்கு கல்வி உதவி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவதில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக்கு இந்த தொழில் வழிகாட்டல் திட்டம் ஒரு முக்கிய சான்றாகும் என்று கூறினார்.

"ஒவ்வொரு வருடமும் கல்வி வழிகாட்டுப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக அனைத்து முகாம்களிலும் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் படித்த முகாம் வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுப் பயிற்சி நிறுவனத்தின் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து தகுந்த வேலை வாய்ப்பு உருவாக்கித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது - என்றும் கூறினார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நடந்த இந்த நிகழ்ச்சியில் 103 முகாம்களை சார்ந்த 2256 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று பயனடைந்தனர்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கலைஞர் புகைப்பட கண்காட்சி ஆரம்பம்!



சென்னை, மே 31

மறைந்த முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு அண்ணா அறிவாலயத்தில் கருணாநிதி தொடர்பான புகைப்பட கண்காட்சியை தி. மு. க. பொருளாளர் டி.ஆர்.பாலு நேற்று வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

தி. மு. கவின் முன்னாள் தலைவரும் முன்னாள் தமிழக முதல்வருமான மு. கருணாநிதியின் நூற்றாண்டு விழா கடந்த ஜூன் மாதம் தொடங்கியது. வரும் ஜூன் 3ஆம் திகதி நூற்றாண்டு நிறைவு பெறுகிறது. இதை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு தி. மு. க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் கருணாநிதி நூற்றாண்டு புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்

சென்னை, மே 31

இஸ்ரேல் அரசை கண்டித்து தமிழகம் தழுவிய போராட்டத்தை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தவுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7-ம் தேதி முதல் சின்னஞ்சிறு பலஸ்தீன பகுதியான காசாவில் இஸ்ரேல் இராணுவம் இனப்படுகொலை அட்டூழியத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதுவரை 36 ஆயிரம் பேருக்கு மேல் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேல் அரசைக் கண்டித்தும் போர் நிறுத்தம் செய்யக் கோரியும் ஜூன் 2ஆம் திகதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தமிழகம் தழுவிய அளவில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ)

# முன்னாள் அமைச்சர்கள்மீதான வழக்கு சிறப்பு நீதிமன்றத்துக்கு

சென்னை, மே 31

முன்னாள் அமைச்சர்கள் சி. விஜயபாஸ்கர், பி.வி.ரமணா ஆகியோர்மீதான குட்கா வழக்கை பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்படவுள்ளது.

கடந்த அ. தி. மு. க. ஆட்சி காலத்தில் தமிழகத்தில் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை சட்டவிரோதமாக விற்பனை செய்ய இலஞ்சம் பெற்றுக்கொண்டு அனுமதி வழங்கியது தொடர்பாக சி. பி. ஐ. அதிகாரிகள் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகள், மத்திய, மாநில அரசு உயர் அதிகாரிகள் என பலர் மீது குற்றம் சாட்டி சி. பி. ஐ. கூடுதல் சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)

# சமூக விரோதிகளை இனியாவது இரும்புக்கரம் கொண்டு அடக்குக

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

சென்னை, மே 31

முதல்வர் ஸ்டாலின் தமிழ்நாடு காவல்துறைக்கு இனியாவது முழு சுதந்திரம் வழங்கி இரும்புக்கரம் கொண்டு சமூக விரோதி" களை ஒடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்த அறிக்கையில்,

தி.மு.க. அரசு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தில் நடைபெறுவது சட்டத்தின் மாட்சிமை பொருந்திய ஆட்சியா? சட்டவிரோத ஆட்சியா? என்று தெரியாமல் மக்கள் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

கடந்த 36 மாத தி. மு. க. ஆட்சியில் சட்டத்தைக் காக்கக்கூடிய பொலிஸாரின் கையைவிட, சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோரின் கைகளே ஓங்கி இருக்கின்றன என்பது பல்வேறு கொடும் சம்பவங்கள் மூலம் தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.

பொலிஸ் துறையை கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், காவல்துறையின் கைகளையும், கண்களையும் கட்டிப்போட்டு தாம் ஏவும் இடங்களில் மட்டும் பாய வைப்பது வெட்கக்கேடானதாகும் - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சயில் 'ஐஸ்' போதை நுகர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் சிக்கினார்!

## அவருடன் மேலும் நால்வர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி, மே. 31

**கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் போதைப்பொருள் வியாபாரி ஒருவரின் வீட்டினுள் இருந்த உப பொலிஸ் பரிசோதகருடன் 5 பேரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

குறித்த வீட்டில் சந்தேகத் திற்கிடமான வகையில் சிலர் தங்கியிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸார் அந்த வீட்டை சுற்றிவளைத்து சோதனையிட்டபோது வீட்டில் 2700 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் இருந்தமையால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை பொலிஸில் பணிபுரிபவர் என்பதும் அவர் கிளிநொச்சியில் உள்ள இந்த வீட்டுக்கு போதைப்பொருள் உட்கொள்வதற்காக வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இவர் உள்ளிட்ட குழுவினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டபோது, போதைப்பொருள் வியாபாரி தவிர்ந்த ஏனைய நால்வரும் போதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.

உப பொலிஸ் பரிசோதகர் தனது நண்பரான இந்த போதைப் பொருள் வியாபாரிக்கு வியாபாரத்தை பராமரிக்க உதவியிருப்பதும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. போதைப் பொருள் வியாபாரத்துடன் அவர் தொடர்புபட்டிருந்தது உறுதியானதையடுத்து, அவர் மீது போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாகவும் வழக்கு தொடரப்படவுள்ளது.

சந்தேகநபர்கள் ஐவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்த கிளிநொச்சி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# கரையோர மக்களுக்கு எச்சரிக்கை!

காலගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
DEPARTMENT OF METEOROLOGY
ශ්‍රී ලංකාව இலங்கை SRI LANKA

கொழும்பு, மே. 31

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறித்த பிரதேசங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் எனவும், கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மறு அறிவித்தல் வரும் வரை கடலில் பயணம் செய்ய வேண்டாம் எனவும் மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கற்பிட்டியில் இருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரை கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் அலையின் உயரம் 2.5 முதல் 3.5 மீற்றர் வரை எழலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கற்பிட்டி, கொழும்பு, காலி தொடக்கம் மாத்தறை வரையான பகுதிகளில் கடல் அலைகள் கரையைக் கடந்து வரக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# நீர் மின்சார உற்பத்தி 40 வீதத்தால் அதிகரிப்பு



கொழும்பு, மே. 31

தற்போது பெய்துவரும் கனமழையால் நீர் மின் உற்பத்தி சுமார் இரு மடங்கு அதிகரித்துள்ளது.

தற்போதைய மழை நிலைமையுடன் நீர் மின் உற்பத்தி 40 வீதத்தால் அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்தார்.

மழையுடனான வானிலை ஆரம்பமாகுவதற்கு முன்னர் நீர் மின் உற்பத்தியானது 20 சதவீதமாகவே காணப்பட்டதாக அவர் கூறினார்.

39 வீதமாக காணப்பட்ட நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு, தற்போது 60 வீதமாக உயர்வடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

# 4 விளையாட்டு சம்மேளனங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தம்!

கொழும்பு, மே. 31

4 தேசிய விளையாட்டு சம்மேளனங்களின் பதிவுகளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை துவிச்சக்கர வண்டி சம்மேளனம், ரக்பி சம்மேளனம், மோட்டார் வாகன சம்மேளனம் மற்றும் வலைப்பந்தாட்ட சம்மேளனம் ஆகிய சம்மேளனங்களின் பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த சம்மேளனங்களின் மேலதிக பணிகளை முன்னெடுப்பதற்கும், அது தொடர்பான தேர்தலை நடத்துவதற்கும் உரிய அதிகாரியாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வங்கி சுவரை இடித்து பாதுகாப்பு பெட்டகத்தை துளையிட்டு 4 கோடி ரூபா பெறுமதியான நகைகளைத் திருடியவர் கைது!

கொழும்பு, மே. 31

ஜா-எலயில் கூட்டுறவு கிராமிய வங்கியொன்றுக்குள் நுழைந்து 2 நாட்கள் அங்கேயே தங்கியிருந்து, பாதுகாப்புப் பெட்டகத்தை துளையிட்டு பணம் மற்றும் தங்க நகைகளைத் திருடிய நபரை பேலியகொடை குற்றத்தடுப்புப் பிரிவு கைது செய்துள்ளது.

குறித்த நபர் வங்கியின் சுவரை இடித்து பாதுகாப்பு பெட்டகத்தை துளையிடும் ஆயுதத்தில், இந்த குற்றச்செயலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்பு பெட்டகத்தில் சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 10 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தையும் திருடியுள்ளதுடன், வங்கியிலிருந்த சி.சி.ரி.வி. கமெரா கட்டமைப்பை முழுமையாகக் கழற்றி எடுத்துச் சென்றுள்ளார்.

எவ்வாறாயினும், பாதுகாப்பு பெட்டகத்தை துளையிடுவதற்காக பயன்படுத்தப்பட்டதென சந்தேகிக்கப்படும் பொருளை வங்கியிலிருந்து கண்டெடுத்த பொலிஸார், அதனூடாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பின்னர் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், ராகமையிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் சி.சி.ரி.வி. கமெராவை பரிசோதித்தபோது, ஒருவர் காரொன்றில் மூன்று தடவைகள் சென்று கிரைண்டருக்கு பயன்படுத்தப்படும் பிளேட், கையுறை, சிறிய சுத்தியல் உள்ளிட்ட ஆயுதங்களை கொள்வனவு செய்கின்றமை கணகாணிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக நடத்தப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் கொழும்பை அண்மித்துள்ள இரவு களியாட்ட விடுதிகளுக்கு அடிக்கடி செல்பவர் என்பது தெரியவந்துள்ளது.

அதனை அடிப்படையாக வைத்து கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரபல களியாட்ட விடுதியொன்றிலிருந்து சந்தேக நபர் வெளியில் வரும்போது அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கெஸ்பாவ - மடபாத, கஹபொல பகுதியை சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கியிலிருந்து திருடிய தங்க ஆபரணங்களில் ஒரு பகுதியை சந்தேக நபர் தற்காலிகமாக தங்கியிருந்த ராகம ஹொரபேயிலுள்ள அறையில் பதுக்கி வைத்திருந்த நிலையில், பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அத்துடன், கிராமிய வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தை துளையிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கிரைண்டர் உள்ளிட்ட ஆயுதங்களும் சம்பவ தினத்தன்று அவர் அணிந்திருந்த ஆடைகளும் அந்த அறையிலிருந்தே கண்டெடுக்கப்பட்டன.

மேலும் திருடிய தங்க ஆபரணங்களில் ஒரு பகுதியை கொழும்பு செட்டியார் தெருவிலுள்ள நகைக் கடைகள் சிலவற்றில் விற்று பெற்றுக்கொண்ட 24 இலட்சம் ரூபாவை கெசினோ விளையாட்டுக்குச் செலவிட்டதாகவும் பொலிஸாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டு வென்னப்புவ மன்னம்பிட்டிய கூட்டுறவு கிராமிய வங்கியின் ஜன்னல்களை பிரித்து உள்ளே நுழைந்து இதேபோன்று திருடியதாகவும் அந்தப் பணத்தில் தாம் தற்போது பயன்படுத்தும் காரை வாங்கியதாகவும் பொலிஸாரிடம் சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

இதனை தவிர 2022 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஜா-எல, வெலிசறை, ராகம, மஹபாகே, கடவத்தை ஆகிய பகுதிகளில் தபால் நிலையம், சதொச மற்றும் உணவு விற்பனை நிலையங்களில் பாதுகாப்புப் பெட்டகங்களை துளையிட்டு பணம் திருடிய சந்தேக நபர் இவர் தான் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ)

# இந்தியாவில் கைதான 4 இலங்கையர்களின் வலையமைப்பு குறித்து விசாரணை தேவை

## கோருகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, மே. 31

இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். உடன் தொடர்புடைய இலங்கை பிரஜைகளுக்கு இலங்கையில் எவ்வாறான தொடர்புகள் உள்ளன?, அவர்களது தொடர்பாடல் வலையமைப்புக்கள் எவ்வாறானவை என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எமது புலனாய்வுப் பிரிவினரை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். உடன் தொடர்புடைய இலங்கை பிரஜைகள் தொடர்பில் குஜராத் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். மொஹம்மட் நுஸ்ரத்,



மொஹமட் பாரிஸ், மொஹமட் ராசிப், மொஹமட் நஸ்ராத் என்ற நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். முஸ்லிம் அல்லாதவர்களை கொலை செய்தால் தாம் சொர்க்கத்துக்குச் செல்வோம் என்று இவர்கள் உறுதிமொழி எடுத்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கு எதிராக அநீதி இழைப்பதாகக் குறிப்பிட்டு பாரதிய ஜனதா கட்சி மீது தாக்குதல்கள் நடத்துவதே தமது இலக்கென இவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களிடமிருந்து குண்டுகளுடன் கைதுப்பாக்கிகள் மூன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன. அதுமாத்திரமின்றி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் இலட்சினையுடன் கூடிய கருப்பு கொடியொன்றும் மீட்கப்பட்டுள்ளதாகவும் குஜராத் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

4 இலட்சம் ரூபாவுக்காக தற்கொலை குண்டு தாக்குதல்களை நடத்த துணிகின்றனர் என்றால் அது எந்தளவுக்கு துரதிஷ்டவசமானது என்பதை உணர முடியும். எனவே இலங்கையிலும் இவ்வாறானவர்கள் உள்ளனரா? அவர்களது தொடர்பாடல் வலையமைப்புக்கள் எவ்வாறுள்ளன என்பதை கண்டறிவதற்காக எமது புலனாய்வு பிரிவினர் குழுவொன்றை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறான தீவிரவாத, அடிப்படைவாத போக்குடையவர்களை இனங்கண்டு அவர்களை பலவந்தமாகவேனும் புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிவெல வீட்டுத் தொகுதியில் போதியளவு வசதிகள் இல்லை!

## அமைச்சர்கள் சிலர் சபாநாயகரிடம் முறைப்பாடு

கொழும்பு, மே. 31

**பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக மாதிவெலவில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் தொகுதியில் வசதிகள் குறைவாக உள்ளதால் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அமைச்சர்கள் சிலர் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் அண்மையில் முறைப்பாடு செய்துள்ளனர்.**

பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக மாதிவெலவில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் தொகுதியில் பெரும்பாலான வீடுகள் சேதமடைந்து காணப்படுவதாகவும் மழை பெய்யும் நாட்களில் சில வீடுகளில் நீர் வழிவதாகவும் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாதிவெலவில் உள்ள அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களில் அவர்களுக்கு தங்கள் குடும்பத்தினருடன் தங்கப் போதுமான இடவசதி இல்லாமை காரணமாக குறித்த வீடுகளை புதுப்பித்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பெரும்பாலான அமைச்சர்கள் தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

குறித்த வீட்டுத்தொகுதியில் காணப்படும் குறைபாடுகளை சீரமைத்து தருவதற்கு பொறியியலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

மேலும், இது தொடர்பில் பாராளுமன்றக் குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த புனரமைப்புப் பணிகளுக்காக இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# தனியார் பல்கலைக்கழக கடனுதவி வரம்பு ரூபா 10 இலட்சமாக உயர்வு

கொழும்பு, மே. 31

தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புகளுக்காக மாணவர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதற்கான வரம்பு 10 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட உள்ளதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், இம்முறை கடனைப் பெறுவதற்கான பிணை நிபந்தனைகளும் அதிகரிக்கப்பட உள்ளன.

தற்போது தனியார் பல்கலைக்கழகங்களில் பதிவு செய்துள்ள மாணவர்கள் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் பணியை உயர்கல்வி அமைச்சு நிறைவு செய்துள்ளது. அந்தத் தகவலின் அடிப்படையில் இம்முறை கடன் வழங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இவ்வருடம் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தேவைப்பட்டால் இன்னும் கூடுதலான மாணவர்களுக்கு கடனுதவி வழங்க முடியும் எனவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தில் இதுவரை ஏழு குழுக்களின் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த மாணவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட அதிகபட்ச கடன் வரம்பு எட்டு இலட்சம் ரூபாய். நான்கு ஆண்டு பட்டப்படிப்புக்கு எட்டு இலட்சம் ரூபாயும், மூன்றாண்டு படிப்புக்கு ஆறு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு இந்த கடன் திட்டத்தில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை சுமார் மூவாயிரத்து ஐநூறு ஆகும். (அ)



# போதைப்பொருள் கடத்திய இளைஞன் யாழில் கைது!

யாழ்ப்பாணம், மே. 31

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு போதைப்பொருள் கடத்திய இளைஞரொருவர் புலனாய்வுப் பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையில் போதைப் பொருளுடன் இளைஞர் கைது செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுப் பகுதியில் இருந்து பஸ் மூலம் ஸ்பிறிற் எனும் போதைப்பொருளை கடத்த முற்பட்டபோது யாழ். நகரில் வைத்து குறித்த இளைஞரை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர்.

இதன்போது விசுவமடு பகுதியைச் சேர்ந்த இளைஞரே கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைக்காக சந்தேக நபர் யாழ்.மாவட்ட குற்ற தடுப்புப் பிரிவினரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (அ)

# நாட்டில் சிகரெட் பாவனையால் நாளாந்தம் 50 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 31

சிகரெட் பாவனையால் இந்நாட்டில் நாளாந்தம் 50 பேர் உயிரிழப்பதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20,000 பேர் புகைப்பிடிப்பதால் உயிரிழப்பதாக அந்த நிலையம் சுட்டிக்காட்டுகிறது.

நாளை அனுசரிக்கப்படும் உலக புகையிலை எதிர்ப்பு தினம் தொடர்பாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

புகையிலைத் தொழிலின் குறுக்கீட்டிலிருந்து நமது குழந்தைகளைப் பாதுகாப்பதே இந்த ஆண்டு உலக புகையிலை எதிர்ப்பு தினத்தின் தொனிப்பொருளாகும்.

தற்போது இலங்கையில் சிகரெட் பாவனை 9.1 வீதத்தால் குறைந்துள்ளதுடன் இளைஞர்கள் மத்தியில் சிகரெட் பாவனை வேகமாக குறைந்து வருவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

புகையிலை நிறுவன அறிக்கைகளின்படி, கடந்த ஆண்டில் சிகரெட் உற்பத்தி 19 சதவீதம் குறைந்துள்ளது.

உலகில் சிகரெட் பாவனை குறைவடைந்து வரும் நாடுகளில் இலங்கையில் நல்ல போக்கு காணப்பட்டாலும் இன்னும் சுமார் 1.5 மில்லியன் மக்கள் சிகரெட் பாவனையில் ஈடுபடுவதாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை சிகரெட் பயன்படுத்துவதற்கு பன்னாட்டு புகையிலை நிறுவனங்கள் பல தந்திரங்களை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைப்பிடிக்கும் பழக்கம் அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் சுவாச நோய் வைத்திய நிபுணர் சந்தன டி சில்வா தெரிவித்துள்ளார். (அ)

# தேர்தல்களை பிற்போடும் கருத்து; ஜூன் 3இல் தெளிவுபடுத்துவேன்

## பாலித ரங்க பண்டார தெரிவிப்பு

கொழும்பு, மே. 31

ஜனாதிபதி தேர்தல் பாராளுமன்ற தேர்தல்கள் குறித்து செவ்வாய்கிழமை தான் தெரிவித்த விடயங்களை ஜூன் 3ஆம் திகதி திங்கட்கிழமை செய்தியாளர் மாநாட்டில் தெளிவுபடுத்தவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டார தெரிவித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களை பிற்போடுவது குறித்து நான் கடந்த செவ்வாய்கிழமை தெரிவித்ததை தொடர்ந்து பலர் பல கருத்துக்களை வெளியிட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.




நான் தெரிவித்த விடயங்களை தெளிவுபடுத்துவதற்காக ஜூன்3ஆம் திகதி செய்தியாளர் மாநாட்டை நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அன்றைய தினம் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிப்பேன் என பாலித ரங்க பண்டார தெரிவித்துள்ளார். (அ)

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் யாழ். மாவட்டத்தில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே. 31

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் அதிகம் காணப்படும் இடங்களில் இவ்வாறு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கரவெட்டி, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் நேற்றுக் காலை முதல் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மழையுடனான வானிலையால் ஏற்படக்கூடிய அபாய நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களைத் தெளிவுபடுத்தும் விசேட வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள், மத வழிபாட்டுத் தலங்கள், கட்டடங்கள் உள்ளிட்ட இடங்களில் டெங்கு அபாயத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டுக்கு உதவி வழங்காத தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் மீண்டும் அதிகரித்துள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையுடன் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீரற்ற காலநிலை காரணமாக 27 வீடுகள் முழுமையாக சேதம்!

கொழும்பு, மே. 31

சீரற்ற காலநிலை காரணமாக இலங்கையில் 678 குடும்பங்களைச் சேர்ந்த 24,886 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் 27 வீடுகள் முழுமையாகவும் 4,755 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை முடிந்த 24 மணித்தியாலங்களில் அதிக மழை வீழ்ச்சி நுவரெலியாவின் வட்டவளை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

குறித்த பகுதியில் 141 மில்லி மீற்றர் அளவில் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான உரிமங்களை மீள ஒப்படையுங்கள்!

## எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு உத்தரவு

கொழும்பு, மே. 31

**அரசாங்கத்திடம் இருந்து மதுபான அனுமதிப்பத்திரங்களை பெற்றதாகக் கூறப்படும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழுவிற்கு அந்த உரிமங்களை உடனடியாக அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்குமாறு எதிர்க்கட்சி கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

எவ்வாறாயினும், அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இதுவரையில் தமது மதுபான அனுமதிப்பத்திரத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வில்லை என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பதுளை ரிதிமாலியத்தவில் 6 மதுபானசாலைகளை திறப்பதற்கு அரசாங்கம் அண்மையில் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உரிமங்களில் ஒன்று, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் தலையீட்டின் மூலம் அவரது தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியின் மனைவி பெயரில் பெறப்பட்டதாக தெரியவருகிறது.

இது தொடர்பில் அந்த தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை நேரில் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனால், மதுபான அனுமதிப்பத்திரத்தை உடனடியாக அரசாங்கத்திடம் கையளிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் உறுப்பினரிடம் தெரிவித்தபோதிலும், அதற்கும் அவர் செவிசாய்க்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை புதிய மதுபானச்சாலைகளை திறப்பது தொடர்பில் பதுளை ரிதிமாலியத்தே பிரதேச மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, தமது அரசாங்கத்தின் கீழ் புதிதாக வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்படுவதாகவும், தேர்தல் அறிவிக்கப்படவுள்ள இந்த நேரத்தில் மதுபான உரிமங்களை வழங்கிய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மைத்திரிபாலவுக்கு எதிராக மனு தாக்கல்

கொழும்பு, மே. 31

நீதிமன்றத்தை அவமதித்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மான்டேக் சரத் சந்திரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனு தொடர்பான உண்மைகளை உறுதிப்படுத்தும் வகையில் பிரதிவாதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரரின் சட்டத்தரணிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தை மீறும் வகையில் செயற்பட்டு நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# கால்வாயில் பெண்ணின் சடலம்!

கொழும்பு, மே. 31

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியிலுள்ள கால்வாயில் இருந்து இனந்தெரியாத பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த சடலம் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஜானக ரத்நாயக்கவுக்கு நீதிமன்றம் அழைப்பு

கொழும்பு, மே. 31

நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளபோதிலும், நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜானக ரத்நாயக்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜூன் 27ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனக ரத்நாயக்கவின் தனிப்பட்ட செயலாளராக இருந்த காயத்ரி பிம்பா என்ற பெண்ணினால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றின்போது, உண்மைகளை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் , லஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு, பெண்கள் மற்றும் குழந்தைகள் பணியகம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆகிய வற்றிலும் அவருக்கு எதிராகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

சட்டவிரோத தங்க இறக்குமதி:

# ஐந்து நிறுவனங்களுக்கு ரூ.1243 மில்லியன் தண்டம்!

கொழும்பு, மே. 31

சட்டவிரோதமான முறையில் தங்கத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்த பல நிறுவனங்களுக்கு 1243 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் தங்கத்தை இறக்குமதி செய்த 5 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அதில் ஒரு நிறுவனத்திற்கு 179 மில்லியன் ரூபா அபராதம் செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

இனிமேல் தங்கத்தினை இறக்குமதி செய்யும் அனைத்து உரிமம் பெற்ற நிறுவனங்களும் இந்த சட்டவிரோத நடைமுறைகளைத் தவிர்க்க வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும், தங்கத்தை நேரடியாக இறக்குமதி செய்யாமல், மூன்றாம் தரப்பினரிடம் இருந்து வாங்கும் தங்கத்திற்கு, உற்பத்தி அறிக்கையினை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அபராதம் விதிக்கும் என்றும் அமைச்சர் கூறினார். (அ)

# பல்கலைக்கழக ஊழியர்களை பணிக்குத் திரும்பப் பணிப்பு!

கொழும்பு, மே. 31

நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலம் கருதி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பணித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல் உட்படப் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இம்மாதம் இரண்டாம் திகதி முதல் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக நிர்வாக உத்தயோகத்தர்கள் மற்றும் போதனைசாராப் பணியாளர்களை உடனடியாகப் பணிக்குத் திரும்பப் பணித்து அந்தந்தத் தொழிற் சங்கங்களின் தலைவர்களுக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும், பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் போதனைசாரா ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பல இணைந்து தங்களது சம்பள முரண்பாடு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 27 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய இது தொடர்பாக பல அமைச்சரவைப் பத்திரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு கல்வி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் தொடர்சியாக ஆராய்ந்த அமைச்சரவை, நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நிபுணர்கள் குழு ஒன்றை அமைப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது. இதன் மூலம் உங்களுக்குப் பொருத்தமான தீர்வு கிட்டும் என நம்பப்படுகிறது.

தொழிற்சங்கப் போராட்டத்தினால் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். நாட்டைக் காக்கும் நாளைய தலைவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு நாட்டின் நற்பிரஜைகளாக உங்கள் பொறுப்புணர்ந்து செயற்பட்டு, பல்கலைக் கழகங்கள் இடையூறின்றி இயங்குவதற்காக உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது. (அ)

## பத்து நாட்களுக்குள் 20 இலட்சம் பேரை இணைக்க ஐக்கிய மக்கள் சக்தி திட்டம்

கொழும்பு, மே. 31

'பத்து நாட்களுக்குள் 20 இலட்சம்' எனும் தொனிப்பொருளின் கீழ் ஐக்கிய மக்கள் சக்திக்கு இணைத்துக் கொள்ளும் திட்டம் அடுத்த மாதம் 7ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கவுள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அதன்படி, ஒரு தேர்தல் மையத்திலிருந்து ஐக்கிய மக்கள் சக்தி அல்லாத புது உறுப்பினர்கள் 200 பேரை கட்சியில் இணைத்துக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் மாதம் 7ஆம் திகதி ஆரம்பிக்கும் இத் திட்டம் 10 நாட்களுக்கு தொடரும். அதன் மூலம் புதிய உறுப்பினர்கள் 20 இலட்சம் பேரை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக் கொள்ளவுள்ளனர்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதார குழுவுடனான விவாதத்திலிருந்து தேசிய மக்கள் சக்தி விலகவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

'ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கிடையிலான விவாதத்துக்கு மாத்திரமே நாங்கள் தயார். பின்னர் விவாதம் குறித்து எந்தவொரு பேச்சு வார்த்தைக்கும் நாங்கள் தயாரில்லை ' என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் விவாத ஏற்பாட்டாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பொருளாதார குழுக்களுக்கிடையிலான விவாதத்துக்கான திகதியை தாமதிக்காமல் அறிவிக்குமாறு தெரிவித்து, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் விவாத ஏற்பாட்டாளருமான நளின் பண்டார தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்று உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கு கடந்த திங்கட்கிழமை இரண்டாவது தடவையாக அனுப்பி வைத்திருந்த கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு தேர்தலும் பிற்போடப்படமாட்டாது

## கூறுகின்றார் வியாழேந்திரன்

மட்டக்களப்பு, மே. 31

**ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட எந்தவொரு தேர்தலையும் பிற்போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு - பன்குடாவெளி கிராமத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்காக வரவு செலவு திட்டத்தில் நிதியொதுக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதியின் பிரகாரம் அதற்குரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தனிப்பட்ட ரீதியில் கருத்துகளை தெரிவிக்க முடியும். ஜனநாயக நாட்டில் அதற்கான சுதந்திரம் இருக்கின்றது. சட்டத்தின் அடிப்படையில் ஒக்றோபர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும்.

அதற்கு பின்னர் பாராளுமன்றத்துக்கு இன்னும் ஆயுட்காலம் இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறலாம்.



ஆனால் அதற்கு இடையில் இன்னும் இரண்டு தேர்தல்கள் இருக்கின்றது. ஒன்று மாகாண சபைத் தேர்தல் அது இன்னும் நடைபெறவில்லை.

அது நீண்ட காலமாக பிற்போடப்பட்டு வருகின்றது. அது பிற்போடப்படுவதற்கு எமது தலைவர்களும் கடந்தகாலத்தில் உடந்தையாக இருந்தார்கள்.

மாகாணசபைத் தேர்தல் நடைபெறவேண்டும். அதே போன்று உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இந்த மாகாணத்தில் வலிமையான அரசியல் கட்டமைப்பின் ஊடாகத் தான் எமது இருப்பினை பாதுகாக்கமுடியும் என்ற அரசியல் கொள்கையுடன் நாங்கள் பயணிக்கின்றோம்.

ஒரு கட்சியின் பொதுச் செயலாளர் இரண்டு வருடத்திற்கு தேர்தல்களைப் பிற்போடுவது குறித்து பேசியிருக்கின்றார். அது அவருடைய கட்சி சார்ந்த கருத்து-என்றார். (அ)

# பிள்ளைகளை தலைகீழாக தொங்க விட்ட தாய் கைது!

## ஏறாவூரில் சம்பவம்

மட்டக்களப்பு, மே. 31

11 வயதான சிறுவனை மரமொன்றில் தலைகீழாக கட்டி தொங்கவிட்டு, கம்பால் அடித்து சித்திவதை செய்ததுடன் இரண்டரை வயது ஆண் பிள்ளையை தொங்கவிட்டு, அடித்து துன்புறுத்தினார் என்றக் குற்றச்சாட்டில் அவ்விரு பிள்ளைகளின் தாயாரான 28 வயதுடைய பெண், செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவில் உள்ள கிராமம் ஒன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. மீட்கப்பட்ட இரு சிறுவர்களையும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முதலாவதாக இந்து முறைப்படி திருமணம் முடித்த பெண், கணவனை விட்டுவிட்டு அவருக்கு பிறந்த முதல் குழந்தையுடன் இஸ்லாம் மதத்துக்கு மாறி, முஸ்லிம் நபரொருவரை திருமணம் முடித்துள்ளார். அவ்விருவருக்கும் குழந்தைகள் இல்லை.

இந்நிலையில், அவரையும் விட்டுவிட்டு புத்தளம் பகுதியிலுள்ள சிங்களவர் ஒருவரை திருமணம் முடித்துள்ளார். அவ்விருவருக்கும் இரண்டரை வயதில் ஆண் பிள்ளை உள்ளது.

அவரையும் விட்டுவிட்டு, தன்னுடைய இரு பிள்ளைகளுடன் ஏறாவூர் சதாம் உசேன் கிராமத்துக்கு மீண்டும் வந்து அங்கு வாழ்ந்து வருகின்றார்.

இந்நிலையில் தனது 11 வயதுடைய மூத்த பிள்ளை, புகைத்தலில் ஈடுபட்டார் என அச்சிறுவனை பிடித்து மரமொன்றில் தலைகீழாக கட்டி தொங்கவிட்டு கம்பால் தாக்கி சித்திரவதை செய்துள்ளார். ஏப்ரல் மாதத்திலேயே இவ்வாறு சித்திரவதை செய்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

அதேவேளை, இரண்டாவது இரண்டரை வயது மகனையும் அடித்து துன்புறுத்தி வருவதாக அந்த பிள்ளையின் தந்தையான புத்தளத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவருக்கு தெரியவந்துள்ளது. அதனையடுத்து உடனடியாக ஏறாவூருக்கு சென்று, தன்னுடைய மகனை தருமாறு அப்பெண்ணிடம் கேட்டுள்ளார். அதற்கு அப்பெண் மறுத்துவிட்டார்.

இதனையடுத்து அந்த தந்தை, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டை விசாரணை செய்த பொலிஸார், அந்த தாயாரின் அலைபேசியை சோதித்துள்ளனர். அதில், அவ்விரு சிறுவர்களையும் தடியால் அடித்து துன்புறுத்தியமை தொடர்பில் எடுக்கப்பட்ட வீடியோக்கள் இருந்துள்ளன.

அதன்பின்னர், அப்பெண்ணை கைது செய்த பொலிஸார், அவ்விரு பிள்ளைகளையும் மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அந்த பெண்ணை, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த ஏறாவூர் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக மீன்களின் விலை அதிகரிப்பு!

மட்டக்களப்பு, மே. 31

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் அண்மைக்காலமாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் கிழக்கு மாகாணத்தில் மீன்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரிய நீலாவணை முதல் பொத்துவில் பகுதி வரையுள்ள கடற்பரப்பு உள்ளிட்ட கடற்பிராந்தியத்தில் மீன்பிடி பெருமளவில் குறைவடைந்துள்ளதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடல் கொந்தளிப்பு நிலவுகின்றமை மீன்களின் விலை அதிகரிப்பிற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்முனை மாநகரை அண்டிய மருதமுனை நற்பிட்டிமுனை பாண்டிருப்பு கல்முனை சாய்ந்தமருது பகுதிகளிலுள்ள மீன் சந்தைகளிலும் ஏனைய நிந்தவூர் மாளிகைக்காடு மீன் சந்தைகளிலும் மீன் வரத்துக்கள் மிகவும் குறைவடைந்துள்ளமையால் மீன்களின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அத்தோடு ஒரு கிலோ வினை மீன் 1600 ரூபாவாகவும், பாரை மீன் ஒரு கிலோ 2400 ரூபாவாகவும், இறால் ஒரு கிலோ 1800 ரூபாவாகவும், கணவாய் ஒரு கிலோ 1700 ஆகவும், சூடை மீன் ஒரு கிலோ 1000 ரூபாவாகவும், சுறா மீன் ஒரு கிலோ 2500 ரூபாவாகவும், வளையா மீன் 1500 ரூபா ஆகவும், நண்டு ஒரு கிலோ 1600 ரூபா ஆகவும் தற்போது மீனவர்களால் கடற்பரப்புக்களை அண்டிய பகுதிகளில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருவதுடன் இதர சில்லறை மீன் வகைகளின் விலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதேவேளை, கடற்கரையை அண்டிய பகுதிகளில் விற்கப்படும் விலைகளை விட மூன்று மடங்கு அதிகரிப்பில் மேற்படி சந்தைகளில் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மறைந்த வலயக் கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானாவுக்கு இரங்கல் நிகழ்வு

காரைதீவு, மே. 31

சம்மாந்துறை வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக விருந்து கடந்த 10 ஆம் தேதி மரணித்த மர்ஹூம் டாக்டர் உமர் மௌலானாவிற்கான துஆப் பிரார்த்தனையும் இரங்கல் நிகழ்வும் நேற்று வியாழக்கிழமை சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனை ஏற்பாடு செய்த இப் பெருநிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்எச்எம் .ஜாபீர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மறைந்த பணிப்பாளருக்கு குர்ஆன் ஓதி துவாப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது. விசேட உரையை விரிவுரையாளர் அன்சார் மௌலானா நிகழ்த்தினார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாசீர் அரபாத் வரவேற்புரை வழங்க முழு நிகழ்வையும் சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றிய தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.



விசேடமாக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமாரின் இரங்கல் செய்தியும் அங்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நுஸ்ரத் நிலோபராவால் வாசிக்கப்பட்டது. வலய கணக்காளர் சீ.திருப்பிரகாசமும் கலந்து கொண்டார்.

மேலும் கல்விப் பணிப்பாளர்கள், கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள், அதிபர்கள் இரங்கல் உரையாற்றினார்கள்.

மறைந்த மௌலானாவின் குடும்பம் சார்பில் அவரது சகோதரர் வாஜித் மௌலானா ஏற்புரை வழங்கினார். நிகழ்வின் செயலாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான எச். நைரூஸ் கான் நன்றியுரையாற்றினார்.

# காக்காச்சிவட்டை விஷ்னு மகா வித்தியாலய பாடசாலைத் தோட்டத்தில் மரக்கறி அறுவடை

மட்டக்களப்பு, மே. 31

"பயிர் வளர்ப்போம் பலன் பெறுவோம்" எனும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களிடையே வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் பாடசாலை வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைத் தோட்டச் செய்கை வெற்றியளித்துள்ளது.

கத்தரி,புடோல், பாகற்காய், பயற்றங்காய், மரவெள்ளி பயிர்களில் முதல் அறுவடை நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் திரு. வே. குணாளன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் இராணுவத்தினர் 400 பேர் கொன்று குவிப்பு!

## ரஷ்ய படைகள் மூர்க்கத்தனம்

மொஸ்கோ, மே 31

**உக்ரைன் இராணுவத்தினர்மீது ரஷ்ய படைகள் மேற்கொண்ட மூர்க்கத்தனமான தாக்குதலில் ஒரே நாளில் 400 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.**

உக்ரைனின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய நகரங்களை குறிவைத்தே ரஷ்ய இராணுவத்தினர் இவ்வாறு தாக்குதல் நடத்தினர்.



உக்ரைனுக்கு எதிரான போரில் ஒரே நாளில் 400 உக்ரைன் இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக ரஷ்யா ராணுவ அமைச்சகம் அறிவித்துள்ளது. இதில் உக்ரைன் இராணுவத்துக்குச் சொந்தமான இரண்டு ராங்கிகள், 11 கவச வாகனங்கள் என்பனவற்றைத் தாக்கி அழித்ததாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

நேட்டோ இராணுவக் கூட்டமைப்பில் இணைய முயற்சித்த உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. 3 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்தப் போரில் இருதரப்பிலும் எண்ணற்ற உயிர்கள் பறிபோயுள்ளன. இருந்தபோதிலும் போரின் உக்கிரம் குறையவில்லை. (ஏ)




## 4. 4 கோடிக்கு அதிகமான முறை பகிரப்பட்ட 'All eyes on Rafah' படம்


காஸா, மே 31

ஏ ஐ தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்ட "All eyes on Rafah" என்ற காஸா ஆதரவு வாசகம் கொண்ட படம் சமூக வலைத்தளங்களில் 4. 4 கோடிக்கும் அதிகமான முறை பகிரப்பட்டு உலகளவில் கவனம் ஈர்த்துள்ளது.

தெற்கு காஸாவிலுள்ள ரபா நகரத்தில் தற்காலிக முகாம்கள் மீது இஸ்ரேல் படைகள் மே 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 45 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். 249 பேர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், காஸா நகரில் நடைபெற்று வரும் படுகொலையை கண்டிக்கும் வகையில், "All eyes on Rafah" என்ற வாசகம் உலகளவில் பேசு பொருளானது. அதேபோன்று ஏ ஐ தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட "All eyes on Rafah" படமும் வேகமாகப் பரவியது. இஸ்டாகிராமில் இதுவரை 4. 4 கோடிக்கும் அதிகமான முறை இந்தப் படம் பகிரப்பட்டுள்ளது.

அந்தப் புகைப்படத்தில் மிக நெருக்கமாக அமைந்துள்ள தற்காலிக கூடாரங்கள் இடம் பெற்றுள்ளன. பாலைவனப் பின்னணியில், மலைகளுக்கு இடையே தற்காலிகக் கூடாரங்களில் இருக்கும் பலஸ்தீனர்களின் துயரமான நிலையை எடுத்துரைப்பது போன்று அந்தப் படம் அமைந்துள்ளது.



## சிறையில் 6 ஆயிரம் நாட்கள்: உலகில் அதிக முறை கைது

நியூயோர்க், மே 31

1970 ஆம் ஆண்டு 20 வயதில் முதன்முறையாக கைது செய்யப்பட்ட ஹென்றி, சிறையில் மொத்தம் 6 ஆயிரம் நாட்களைக் கழித்துள்ளார்.

அமெரிக்காவின் கென்டகி மாகாணத்தில் வசித்து வந்தவர் ஹென்றி இயர்ல் (வயது 74). உலகில் அதிக முறை கைது செய்யப்பட்ட நபர் என அமெரிக்காவில் பிரபலமடைந்தவர். அவருடைய வாழ்நாளில் 1,300 முறைக்கும் அதிகமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

1000 ஆவது முறையாக 2008 ஆம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டார்.

5 தசாப்தங்களில், 1,500 முறை அவர் கைது செய்யப்பட்டார் என ஸ்மோகிங் கன் என்ற ஊடகம் செய்தி தெரிவிக்கின்றது. கடைசியாக, 2017-ம் ஆண்டு ஏப்ரலில் அவர் கைது செய்யப்பட்டார்.


இந்த நிலையில், சில நாட்களுக்கு முன்னர் அவர் உயிரிழந்தார். உலகில் அதிக முறை சிறையில் வாழ்நாளை கழித்த நபர் என்று அவர் அடையாளப்படுத்தப்பட்டார். (ஏ)

# ரைட்டானிக் கப்பலை பார்க்க புதிய நீர்மூழ்கி வடிவமைப்பு!

வாஷிங்டன், மே 31

அமெரிக்காவின் ஒஹையோ பகுதியைச் சேர்ந்த கோடீஸ்வரரான லேரி, கடலில் மூழ்கிய ரைட்டானிக் கப்பலை பார்க்க புதிய நீர்மூழ்கியை வடிவமைத்து வருகிறார். இதன் மூலம் வரும் 2026 ஆம் ஆண்டு கடலுக்கு அடியில் அவர் செல்ல திட்டமிட்டுள்ளார்.

74 வயதான லேரி, சாகச பிரியர். ரைற்றானிக் கப்பலை பார்ப்பதற்காக ட்ரைடன் சப்மரைன்ஸ் என்ற நிறுவனத்தை அவர் அணுகியுள்ளார். அவருக்காக வடிவமைக்கப்பட்டு வரும் இந்த நீர்மூழ்கியில் இரண்டு பேர் பயணிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, ஆழ்கடலில் மூழ்கியிருக்கும் ரைற்றானிக் கப்பலை பார்வையிடும் சாகச சுற்றுலாவை அமெரிக்காவைச் சேர்ந்த ஓசன்கேட் என்ற நிறுவனம் கடந்த ஆண்டு மேற்கொண்டது. இதற்காக 21 அடி நீளத்தில் 'டைட்டன்' என்ற சிறப்பு நீர்மூழ்கியை அந்த நிறுவனம் தயாரித்திருந்தது. கடந்த ஆண்டு இதில் ஐந்து பேர் பயணம் மேற்கொண்ட நிலையில் அதன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. தீவிர தேடுதலுக்குப் பிறகு அவர்கள் ஐவரும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே.

தென்கொரியாவில் குப்பைகளை கொட்டி

# இராட்சத பலூன்கள் மூலம் வடகொரியா அச்சுறுத்தல்

சியோல், மே 31

இராட்சத பலூன்கள் மூலம் குப்பைகள் மற்றும் கழிவுகளை தென்கொரியா எல்லைக்குள் அனுப்பி வைத்துள்ளது வட கொரியா. இரண்டு பலூன்களை ஒன்றாக இணைத்து அதில் குப்பைகளைக் கட்டி அனுப்பி வைத்துள்ளது. இரு நாட்டின் எல்லையில் அமைந்துள்ள தென்கொரியா பகுதிகளுக்குள் ஏராளமான பலூன்கள் இவ்வாறு பறந்து வந்துள்ளதாக தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.



அந்த பலூன்கள் சுமந்து கொண்டு வந்த பையில் குப்பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள், காலணிகள், விலங்கு கழிவுகள் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். வடகொரியாவின் இந்தச் செயல் சர்வதேச சட்டத்தை மீறுகிறது. மேலும் தென்கொரிய மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல் என அந்த நாட்டு அதிகாரிகள் குற்றஞ் சாட்டினர். (ஏ)

## ஐ. நாவின் ஆன்மா மாண்டுவிட்டது!

### துருக்கி ஜனாதிபதி சீற்றம்

அங்காரா, மே 31

ஐ. நாவின் ஆன்மா காஸாவில் மாண்டுவிட்டது. தனது சொந்த ஊழியர்களைக் கூட அதனால் பாதுகாக்க முடியவில்லை.- இவ்வாறு கடுமையாக விமர்சித்துள்ளார் துருக்கி ஜனாதிபதி எர்டோகன்.



தெற்கு காஸாவிலுள்ள ரபா நகரம்மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் இன்னும் என்ன நடக்க வேண்டுமென காத்துக் கொண்டு உள்ளீர்கள். இஸ்லாமிய உலகத்துக்கும் நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொதுவான முடிவை எடுக்க ஏன் தாமதம்? இஸ்ரேல், காஸாவுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் அச்சுறுத்தலாக விளங்குகிறது. - என்று குறிப்பிட்டுள்ளார் துருக்கி ஜனாதிபதி.

கடந்த 26 மற்றும் 28 ஆகிய திகதிகளில் இஸ்ரேல் படைகள், காஸாவின் ரபா நகரின்மீது நடத்திய தாக்குதலில் சுமார் 80 பலஸ்தீனர்கள் பலியாகினர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அரசமைப்பின்படி நீடிக்க முடியும்!

## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 31

**"ஜனாதிபதியின் பதவிக் காலத்தை அரசியலமைப்பின் பிரகாரம் நீடிக்க முடியும்" என பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**



Vijitha Herath

பத்தரமுல்லை பெலவத்தையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித் ரங்கே பண்டாரவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை யாருடையது?" என விசாரிக்க வேண்டிய அவசியமில்லை,என்றும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை இரண்டு வருடங்களுக்கு நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டாலும் தற்போது அதனை உறுதிப்படுத்த எவரும் இல்லை எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டார். (அ)

# தேர்தலைப் பிற்போடுவது ஜனநாயக விரோத செயல்!

## சுனில் ஹந்துனெத்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 31

"தேர்தலைப் பிற்போடுவது ஜனாநாயக விரோத செயற்பாடாகும்" என தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரப் பேரவை உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டுமக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்தது அனைவருக்கும் தெரிந்த விடயம். அரசாங்கம் தேர்தலை பிற்போடுவதற்கான சூழ்ச்சிகளை முன்னெடுத்துள்ளது. அரசாங்கம் அவ்வாறு முயற்சித்தால் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட நிலை தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும்.

பாலித ரங்கே பண்டார ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு பல முறை முயற்சித்துள்ளார். தேர்தல் இன்றி இந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க விடம் 2 வருடங்களுக்கு ஒப்படைக்குமாறு அவர் கூறுகின்றார். அதனை மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இது ஜனாநாயக விரோத செயற்பாடாகும். பாலித ரங்கே பண்டார தெரிவித்த கூற்று மீளப்பெறப்பட வேண்டும்-என்றார்.

# நச்சுப் போதைப்பொருட்களுடன் 12 பெண்கள் உட்பட 684 பேர் கைது

கொழும்பு, மே 31

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத்தன்மை மிக்க போதைப்பொருட்களுடன் 12 பெண்கள் உட்பட 684 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 38 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த நிலையில், போதைப் பொருட்களுக்கு அடிமையான 5 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசாரணையில் சந்தேகநபர்களிடமிருந்து 141 கிராம் ஹெரோயின், 139 கிராம் ஐஸ், 217 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# மாணவிகள் மீது தாக்குதல் அருட்சகோதரிக்குப் பிணை

யாழ்ப்பாணம், மே. 31

யாழில் மாணவிகளை தாக்கிய குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அருட்சகோதரி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள பாடசாலை விடுதியில் தங்கி கல்வி கற்று வந்த தம்மை விடுதிக்கு பொறுப்பான அருட்சகோதரி அடித்து துன்புறுத்தினார் எனக் கூறி நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை விடுதியில் இருந்த மாணவிகள் 11 பேர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

இதனை அடுத்து மாணவிகளை யாழ்.போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரியின் முன் முற்படுத்தியவேளை மாணவிகளின் உடலில் தழும்புகள் இருந்தமை கண்டறியப்பட்டது.

அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த ஊர்காவற்றுறை பொலிஸார் அருட்சகோதரியை கைது செய்து, ஊர்காவற்றுறை பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, அவரை நேற்று முன் தினம் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன் தினம் புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நடைபெற்றபோது, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அருட்சகோதரி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணையில் , அருட்சகோதரியை 50 ஆயிரம் ரூபாய் காசு பிணை, ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, மாணவ விடுதிக்கு அருட்சகோதரி செல்லக்கூடாது எனவும், பாதிக்கப்பட்ட மாணவர்களுடனோ, அவர்களின் பெற்றோர்களுடனோ தொடர்பு கொள்ளக்கூடாது எனவும் நிபந்தனையும் விதித்துள்ளது. (அ)

# 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' ஆஸி. பேர்த் மாநகரில் நாளை வெளியீடு


## டாக்டர் அமீர் அலி தலைமையில் அறிமுகம்

பேர்த், மே. 31

மேற்கு அவுஸ்திரேலியா, பேர்த் மாநகரில் கலாசூரி இ. சிவகுருநாதனின் ஊடக பணியை கௌரவிக்கும் முகமாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் நாளை ஜூன் முதலாம் திகதி வெளியிடப்படவுள்ளது.

தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" வெளியீட்டு விழா ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை மேற்கு அவுஸ்திரேலியா, பேர்த் மாநகரில் நடைபெறவுள்ளது.

தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக பணியாற்றிய, கலாசூரி இ. சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் அவருக்கு நிகர் அவரே. அவரின் நினைவாக இந்நூல் வெளியீடு, ஹில் விழூ இன்டர்கல்ச்சுரல் கம்யூனிட்டி சென்டர் மண்டபத்தில், 01-06-2024 மாலை 3.30 முதல் 5.30 வரை நடைபெறும். 1 ஹில் விழூ பிளேஸ், பென்ட்லி, மேற்கு அவுஸ்திரேலியா. (Hillview Intercultural Community Centre, 1 Hill View Place, Bentley, Western Australia) எனும் முகவரியில் நடைபெறும்.




மூத்த தமிழ் எழுத்தாளர், இலக்கிய ஆர்வலருமான டாக்டர் அமீர் அலி தலைமையில் இந்நூல் வெளியீடு நடைபெறவுள்ளது. தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ.சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத்துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர்.

இந்நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திரு நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து சிறப்புரை வழங்குவார். அதன்பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்துவார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவண காப்பாளருமான கோபிநாத் தில்லைநாதன் ஆற்றுவார்.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப் பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூலின் தொகுப்பாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்குவார்.

இதன் பின் பேர்த் மாநகரில் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கும் புகழ் பெற்ற பாடகரும், இலக்கிய ஆர்வலருமான திரு. ராஜன் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் இறுதியாக விழா நிறைவு பெறும்.

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூல் பேர்த் மாநாகரில் வெளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மழையுடனான வானிலை நீடிக்கும்

கொழும்பு, மே. 31

நாட்டில் நிலவும் கடும் காற்று மற்றும் பலத்த மழையுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்தின் சில பகுதிகளிலும் 75 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

பலத்த மழையுடனான வானிலையால் 20 மாவட்டங்களில் 26,524 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் மாலை அல்லது இரவுவேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு, காலி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய 5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுல் உள்ளது. (அ)

# மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயத்தில் 300இற்கும் மேற்பட்ட பாடசாலைகள்!

கொழும்பு, மே. 31

மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் 300 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் அமைந்துள்ள நிலையில், குறித்த பகுதிகளில் அனர்த்தங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவு ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன் மண் சரிவு அதி அபாய பகுதிகளில் பல்வேறு அரச நிறுவனங்களும் காணப்படுவதாக அவர் கூறினார்.

இதேவேளை, மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் சுமார் 14,000 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும், அதில் 2,600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளன என்றும் காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## இலங்கை...

நிற்கவும் அட்டூழியங்களை செய்த குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவும் ஐ. நா. உயர் ஆணையரின் பரிந்துரைகளுக்கு செவிசாய்க்கவும் என்றும் இங்கிலாந்து அரசாங்கத்துக்கு அவர் மீண்டும் அழைப்பு விடுத்தார்.

## விபத்தில்...

நேற்றுமுன்தினம் அவரை கணவர் சைக்கிளில் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கிருந்து இருவரும் திரும்பிய வேளை பின்னால் வந்த கார் அவர்களை மோதியது. இதில், பெண் படுகாயமடைந்தார். தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார். கணவர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## நீதியையும்...

இறுதிக் கட்டப் போரில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல் தொடர் பாக கெலும் மக்ரே தயாரித்திருந்த ஆவணப் படம் சனல் - 4 தொலைக்காட்சி அலைவரிசையில் வெளியாகி பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது. போர் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் பூர்த்தியை தொடர்ந்து கெலும் மக்ரே வெளியிட்ட செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 15 வருடங்களின் பின்னர், அதனை நாம் மே மாதம் 18 ஆம் திகதி நினைவுகூருகின்றோம். இருப்பினும் தமிழ் மக்களுக்கு எதிரான மீறல்கள் தொடர்கின்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தரப்பினர் அதனால் ஏற்பட்ட தாக்கத்துடனேயே தொடர்ந்து வாழ்கின்றனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் அவர்களின் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கான உரிமை இலங்கை அரசாங்கத்தால் மறுக்கப்படுகின்றது. அதேபோன்று இன்றளவிலேயே தமிழர் தாயகப் பகுதிகள் படைத் தரப்பினரின் வலுவான கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றது.

எனவே, முன்னெப்போதையும்விட இப்போது உண்மை மற்றும் நீதி என்பன உடனடியாக உறுதிப்படுத்தப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது. 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மிகமோசமான சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படுவதும், பொறுப்புக் கூறல் உறுதி செய்யப்படுவதும் இன்றியமையாததாகும்.

இதேபோன்ற சம்பவங்களே இன்று காசாவில் இடம்பெறுகின்றன. காசாவில் வாழும் ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் என சகல மக்களுக்கு எதிராக இஸ்ரேலிய அரசாங்கம் மிகமோசமான மீறல்களைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் இலங்கை அரசும் சர்வதேச சமூகமும் அடைந்திருக்கும் தோல்வி, தற்போது காஸாவில் இடம்பெற்றுவரும் அதனையொத்த மீறல்களை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

மனித உரிமைகள் மற்றும் நீதிக்கு மதிப்பளிக்கும் சகலரும் "இனி இவ்வாறான சம்பவங்கள் நடைபெறக் கூடாது" என்பதையே வலியுறுத்த வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## சுமந்திரன்...

செயல்படுபவர். இந்திய, மேற்குலக நாடுகளின் நலன்களின் அடிப்படையில் அந்தத் தரப்புகளுக்காக செயல்படும் இலங்கை அரசாங்கத்தின் முகவர். இப்போதும் அவர் அதையே செய்கின்றார். ஓர் அணியில் இருந்து கொண்டு பிரிந்து இருப்பதைப் போன்ற பல்வேறு அணுகுமுறை களைக் கையாள்கின்றார்.

சர்வதே ரீதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் செயல்பாட்டாளர்களை கைது செய்து - எதிராகப் பல நடவடிக்கைகளை முன்னெடுத்தவர் ரணில். அதனாலேயே அந்த நேரத்தில் தேர்தலை புறக்கணிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவின் உண்மை முகத்தை மறைக்கவே விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை வாக்களிக்காமல் தடுத்தனர் என்று தேசவிரோதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எம். ஏ. சுமந்திரனும் பொய்ப் பரப்புரை செய்கின்றனர். தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொண்டிருக்காவிட்டால் முள்ளிவாய்க்கால் மண் வரை சென்றிருக்கமாட்டார்கள் - என்றார். (ஐ)

## ஜனாதிபதி...

விக்கிரமசிங்கவின் வாழ்க்கை மற்றும் இலக்கிய பிரிவு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ் வில் உரையாற்றியபோதே பிரதமர் மேற்கண்ட விடயங்களை தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

எந்தக் காலத்திலும் அரசாங்கமோ அல்லது ஆளும் கூட்டணியோ கலந்துரையாடாத விடயங்களை முன்வைப்பது தவறு. தேர்தல் குறித்த அரசின் நிலைப்பாடு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு விதிகளின்படி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கு இடையில் இது திட்டமிட்டபடி நடக்கும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பொதுத் தேர்தல் நடக்கும். மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## சர்வதேச...

மாவட்ட செயலகம் முன்பாக நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்ற போராட்டத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவது உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியாவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு கருத்து வெளியிட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயசந்திரா,

"காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை தேடி 15 வருடங்களாக நாம் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். அரசாங்கம் இதுவரை எமக்கு உரிய தீர்வை வழங்கவில்லை. தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் கோபத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. மேலும் கலப்பு நீதிமன்றத்தின் ஊடாக தீர்வு வழங்கப்படும் என அரசு கூறுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ரணில் விக்கிரம சிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் மீது எமக்கு நம்பிக்கை இல்லை. இவர்கள் மூவரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தொடர்பில் எதையும் செய்யமாட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் எமக்கு சர்வதேச விசாரணை ஒன்றே தேவை - என்றார்.

இதேநேரம், நேற்றைய தினம் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 100 கோடி டொலர் முதலீடு இலக்கை எட்டியுள்ளோம்!

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே 31

இலங்கை முதலீட்டுச் சபையானது 2024ஆம் ஆண்டுக்கான 100 கோடி அமெரிக்க டொலர் முதலீட்டு இலக்கை முதல் காலாண்டிலேயே நாம் எட்டியுள்ளோம் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இலங்கை முதலீட்டு சபையுடன் முதலீட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடப்பட்டுள்ள முதலீட்டாளர்களுடன் தமது வர்த்தகத்தை தொடர்வதற்காக நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், அதானி நிறுவனம் ஏற்கனவே முதலீட்டு சபையுடன் 82 கோடி டொலர் முதலீட்டுக்கும் ஏனைய வர்த்தக நிறுவனங்களுக்கு மேலும் 32 கோடி டொலர்களுக்கும் ஒப்பந்தம் செய்துள்ளன எனவும் கூறினார்.

(ஐ)

# சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 31

அரச துறையிலுள்ள சகல பிரிவுகளிலும் நிலவும் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருந்த நாடு இப்போதுதான் எழுந்து நடக்க ஆரம்பித்துள்ளது. நாடென்ற ரீதியில் இன்னும் கடக்க வேண்டிய தூரம் அதிகம் உள்ளது. அதற்கு தொழிற்சங்க அமைப்புகளும் காலத்துக்கு ஏற்ப மாற்றங்களை செய்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தேசபந்து லெஸ்லி தேவேந்திரவின் தொழிற்சங்கப் பணிகளுக்கு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு தேவையான செயல்திட்டத்துக்காக அனைத்துத் தொழிற்துறையினரதும் கருத்துக்களைப் பெறவும் கலந்துரையாடவும் எதிர்காலத்துக்குப் பொருத்தமான தொழிலாளியை உருவாக்குவதற்கும் "ஊழியர் மையம்" ஒன்றை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. அதற்காக அரசாங்கம் ஆண்டு தோறும் ஒரு தொகை பணத்தை ஒதுக்கும்.

நாட்டின் நிதித்துறையின் ஸ்திரத் தன்மையை பேணுவதற்காக 2027 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டுக் கடனைச் செலுத்தாமல் இருப்பதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

அரச நிறுவனங்களுக்கு அரசியல் ரீதியாக பணிப்பாளர் சபைகளை நியமிப்பதைத் தடுக்கும் வகையில் புதிய சட்டங்கள் கொண்டுவரப்படும். முறையான திட்டத்தினூடாக நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லை.-என்றார்.

இந்த நிகழ்வில் தேசபந்து லெஸ்லி தேவேந்திரவுக்கு ஜனாதிபதி நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

(எ)

## இராணுவ...

தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு ஆளுநர் பி. எச். எம். சாள்ஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் படையினருக்கு காணிகள் சுவீகரிப்பது தொடர்பிலும் இதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த செயல்பாட்டை நிறுத்துவது அவசியம் எனவும் கூறினார்.

அத்துடன், பொது மக்களின் காணிகளை படையினருக்கு வழங்க முடியாது. படையினருக்கு காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் அளவீடு செய்வதையும் நிறுத்த வேண்டும். இது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

இதையடுத்து, படையினரின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வையுங்கள் என நில அளவைத் திணைக்களத்தினருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்தார்.

மேலும், யாழ். மாவட்டத்தில் படைகளின் தேவைக்காக பொது மக்களின் காணிகளை அளவீடு செய்வதை நில அளவைத் திணைக்களம் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்று அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானம் இயற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் முன்மொழிய பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் வழிமொழிந்தார்.

இந்தக் கூட்டத்தில் இராணுவம், பொலிஸார், அரச திணைக்கள அதிகாரிகள் அரசியல்வாதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியா...

அத்துடன், அங்கு கட்டடம் ஒன்றுக்கும் அவர் அடிக்கல் நாட்டி வைத்தார்.

இதேபோன்று, கம்பிலிவெவ சிங்கள குடியேற்ற கிராமத்தின் அபிவிருத்திக்காக 19 இலட்சம் ரூபாயை ஈ. பி. டி. பி. கட்சியின் திலீபன் எம். பி. ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ)

## 13-15வயது...

இந்த இ - சிகரெட்களில் ஒருவித இரசாயனம் காணப்படுகிறது. இதனால் இ - சிகரெட்களைப் பயன்படுத்தும் சிறுவர்கள் வேகமாக புகைத்தல் பாவனைக்கு அடிமையாகின்றனர்.

இதனால் பெற்றோர்கள் அனைவரும் அவர்களது பிள்ளைகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சிகரெட் பாவனையால் சுவாச மற்றும் புற்று நோய்கள் ஏற்படக்கூடும் என்றும் அவர் கூறினார்.

உலக புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார். (ஐ - எ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 6இல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# உக்ரைனுக்காகப் போரிடும் இலங்கையர்களும் உள்ளனர்

## மேற்குலகம்மீது ரஷ்ய தூதுவர் அதிருப்தி

கொழும்பு, மே 31

**உக்ரைனுக்காக போரிடும் இலங்கையர்கள் குறித்து மேற்குலக நாடுகளும், ஊடகங்களும் கவனம் செலுத்தாமல் உள்ளது அதிருப்தியளிக்கிறது. - இவ்வாறு இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் எஸ். ட்ஜகார்யன் தெரிவித்துள்ளார்.**

ரஷ்யாவுக்காக இலங்கையின் முன்னாள் இராணுவத்தினர் போரிடுவது குறித்து மேற்குலக நாடு ஒன்று கவலை வெளியிட்டுள்ளதாக வெளியான செய்தி குறித்து சுட்டிக்காட்டியுள்ள அவர் ரஷ்யாவுக்காக போரிடும் இலங்கையர்கள் குறித்து மாத்திரம் மேற்குலகம் கவனம் செலுத்துகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சும் ரஷ்ய அதிகாரிகளும்



இந்த விவகாரத்துக்குத் தீர்வைக் காண்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்- என்றார்.

# யாழில் மாணவிகளுடன் துர்நடத்தை ஆசிரியருக்கு கற்பிக்க தடை விதிப்பு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்தில் 10 வயது மாணவிகளுடன் துரநடத்தையில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆசிரியருக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சால் பணித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 05 இல் கல்வி கற்கும் 10 வயது மாணவிகளுடன் ஆசிரியர் ஒருவர் தவறாக நடந்து கொண்டதாக பாதிக்கப்பட்ட மாணவி ஒருவரின் பெற்றோர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததன் அடிப்படையில், பொலிஸார் ஆசிரியரை கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

ஆசிரியர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் மன்றில் வழக்கு நிலுவையில் உள்ளது. சம்பவம் தொடர்பில் கல்வித் திணைக்களம் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. விசாரணை அறிக்கை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த நிலையில், ஆசிரியர் தனது பணியைத் தொடரத் தடை விதிக்கப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆசிரியருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ)

# ரஷ்யாவுக்கு பயணமாகிறது இலங்கை பிரதிநிதிகள் குழு

கொழும்பு, மே 31

ரஷ்ய - உக்ரைன் போரில் ஈடுபட்ட முன்னாள் இலங்கை இராணுவத்தினர் குறித்து விசாரணைகளை முன்னெடுக்க இலங்கை பிரதிநிதிகள் குழு அடுத்த மாதம் ரஷ்யா செல்லவுள்ளது.


கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 5 - 7 ஆம் திகதிகளுக்கு இடையில் இலங்கைப் பிரதிநிதிகள் ரஷ்யாவுக்கு பயணம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ரஷ்ய - உக்ரைன் போரில் ஈடுபட்ட இலங்கையின் முன்னாள் இராணுவத்தினர் பற்றிய தகவல்களைப் பெற பாதுகாப்பு அமைச்சு விசேட தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளதாகவும் அந்த இலக்கத்துக்கு இதுவரை 455 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

இதுவரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில் 16 இலங்கையர்கள் காணாமல் போயுள்ளதாகவும், 26 இலங்கையர்கள் நாட்டுக்கு மீள அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# பொல்கொல்லை நீர்த்தேக்கத்தின் 5 வான் கதவுகள் நேற்றுத் திறப்பு



கண்டி, மே 31

மத்திய மலைநாட்டில் அதிகாலை முதல் பெய்து வரும் கடும் மழையால் மகாவலி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் கண்டி - பொல்கொல்லை நீர்த்தேக்கத்தின் ஐந்து வான் கதவுகள் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் முதல் திறக்கப்பட்டுள்ளதாக மகாவலி அதிகார சபையின் பொல்கொல்லை காரியாலயம் தெரிவித்துள்ளது.

பொல்கொல்லை நீர்த்தேக்கத்தின் ஐந்து வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் அதனூடாக ஒரு வினாடிக்கு 19,000 ஆம் கன அடி நீர் விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி கங்கையில் அதிகளவில் நீர் அதிகரிப்பதால் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் குறித்த காரியாலயம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# நாட்டிலுள்ள மருத்துவமனைகளை மூடவேண்டிய நிலை ஏற்படலாம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 31

போதிய மருத்துவர்கள் இன்மை பிரச்னை தொடர்ந்தால் மருத்துவமனைகளை மூடவேண்டிய நிலையேற்படலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

உரிய தரப்பினர் நாட்டின் மருத்துவ அமைப்புக்குத் தேவையான மருத்துவர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்காவிட்டால் மருத்துவர்கள் இன்றி பாதிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளை மூடுவது குறித்து தீர்மானிக்க வேண்டிய நிலையேற்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுக் கூட்டத்தில் இது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமால் விஜயசிங்க தெரிவித்தார்.

மருத்துவமனைகளுக்கு நியமிக்கப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காததால் நாட்டின் மருத்துவத்துறையில் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது.

நாட்டின் சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப நியமிக்கப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதிக மருத்துவர்களை உருவாக்க வேண்டும். பயிற்றுவிக்க வேண்டும். வசதிகளை அதிகரிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்து வருகின்ற போதிலும் புதிய மருத்துவர்களை உருவாக்கினாலும் அவர்களுக்கு நாட்டில் வேலை வழங்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

1390 மருத்துவர்கள் தங்கள் நியமனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 8 மாதங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. நோயாளருக்கு உரிய சேவையை வழங்க முடியாமல் தடுமாறும் மருத்துவமனைகளுக்கு உதவக்கூடிய மருத்துவர்களின் பரிதாபமான துரதிஷ்டவசமான நிலையிது. நியமனங்களை வழங்குவதில் ஏற்படும் தாமதங்களை அறிந்தும் தொடர்புபட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள் இல்லை. - என்றார். (எ)

# கொழும்பு துறைமுகம் வந்த கப்பலில் எரிபொருள் கசிவு

கொழும்பு, மே 31

கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பலொன்றில் எரிபொருள் கசிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து எரிபொருள் கசிவைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கப்பலில் இருந்து கசிந்துள்ள எரிபொருள் துறைமுகக் கடலில் கலந்துள்ளதால் குறித்த பகுதி கடல் நீர் மாசடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ரூ. 1700 சம்பள விடயத்தில் பயத்தைக் கைவிடுங்கள்!

## கூறுகிறார் அமைச்சர் ஜீவன்

ஹற்றன், மே 31

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளம் நிச்சயம் கிடைக்கும். எனவே, பயத்தைக் கைவிடுங்கள் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 60 ஆவது ஜனனதின நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பெருந்தோட்ட நிறுவனத்தின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு நாளை வெள்ளிக்கிழமை நமக்கு சார்பாகவே வழங்கப்படும். மக்கள் இன்று பெரும் கஷ்டத்தில் உள்ளனர். பெருந்தோட்ட நிறுவனங்கள் சட்ட நடவடிக்கை எடுத்தால் அதனை எதிர்கொள்ள நாங்களும் தயார். நாட்டின் ஜனாதிபதி மற்றும் தொழில் அமைச்சர் ஆகியோர் எமக்கு முழு ஆதரவைத் தருகின்றனர்.

பெருந்தோட்ட நிருவனங்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் வழங்காவிட்டால் பெருந்தோட்ட நிறுவனங்களிடமிருந்து பெருந்தோட்டங்களைப் பெற்று நடத்த கூடிய வேறு நிறுவனங்களுக்கு வழங்குவோம் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஆகவே, பெருந்தோட்ட நிறுவ னத்தினர் கூறுவதை மக்கள் ஒரு போதும் நம்ப வேண்டாம். மக்கள் மத்தியில் பெருந்தோட்ட நிறுவ னங்கள் பயத்தை விதைக்கின்றன. கூட்டு ஒப்பந்தம் ஓர்



அடிமை சாசனம் என்று நிறைய பேர் விமர்சித்தனர்.

மலையகப் பெருந்தோட்ட மக்களை நான் ஒருபோதும் விட்டுக் கொடுக்கவோ கைவிடவோ மாட்டேன். எனது தந்தை எனக்கு முறையான வரலாற்றைக் கற்றுக் கொடுத்த காரணத்தால் தான் மக்கள் மத்தியில் இன்று நான் சேவையாற்றிக் கொண்டிருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org